அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 05/2017

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0238
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.03.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 26:3 ஆம் உறுப்புரையினை திருத்தம் செய்தல்**

தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 26:3 ஆம் உப பிரிவிற்கு உமது அவதானம் கோரப்படுகின்றது. அவ் உப பிரிவுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 26:3:1 உப பிரிவினை சேர்த்து திருத்தியமைப்பதற்கு 2017.01.31 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

26:3:1 ஒழுக்காற்று விசாரணையினால் அதிருப்தியடையும் அலுவலர் ஒருவருக்கு அவ் ஒழுக்காற்று கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதற்குள்ள உரிமையை நேரிய முறையில் கையால்வது தொடர்பாக ஒழுக்காற்றுக் கட்டளையை வழங்குவதற்கு அடிப்படையாக கொண்ட விடயங்களை குறித்த அலுவலருக்கு அறிவிப்பதற்கு ஒழுக்காற்று அதிகாரி கட்டுப்பட்டுள்ளார்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு